பட்டப் படிப்புகள் கல்லூரி
G.C.E. A/L 1986 Aug.
கணிதவியல் - திரு. செவந்தி
பொருளியல் - திரு. தர்மா
அளவையியல் - திரு. விக்கி
இந்துநாகரிகம் - திரு. தாஸ்
தமிழ் - திருமதி லிங்கராசா
அரசியல் - திரு. வோ
புவியியல் - திரு. ராஜேஸ்
ஆரம்பம் 23-3-86

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பட்டப் படிப்புகள் கல்லூரி
கிளை: (இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
I.C.M.A.
I.A.A.
I.A.B. Found
Inter
Final
ஆரம்பம்: 23-3-1986

சுடர்:- I யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 1 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 2 (14-03-1986) UTHAYAN LIVELY TAMIL DAILY கதிர்:100

மிச்சநி மொனி



இந்தியா ஏதோதாங்கள் போட்டு வைச்ச நாடு, ராஜீவ் ஒரு குழந்தைப் பெடியன் எண்ட நினைப் புப்போலை உவையளுக்கு! எல்லாம் நல்லதுக்கு இல்லை ...!

## இறந்தோர் விவரம்

பலாலி, மார்ச் 14

நேற்று மயிலிட்டி தெற்குப்பகுதியில் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் சூட்டினால் இறந்தோர் விவரம் வருமாறு:

1. செல்வி இரத்தினம் சுமதி (16 வயது) வெங்காயம் பிடுங்கிக்கொண்டு இருந்த போது சூடுபட்டது.

2. செல்வன் இரத்தினம் சதீஸ்வரன் (5 வயது) மரணச்சடங்கில் நின்ற போது நெற்றியில் சூடு பட்டது.

வேலாயுதம் விஜயகுமார் (3 வயது) செல்வம் என்றழைக்கப் படுபவர் தலையில் சூடு பட்டு மூளை வெளியே வந்து இறந்தார்.

இவர்களுள் முதல் இருவரும் மீன்வியாபாரம் செய்யும் திரு இரத்தினம் என்பவரின் பிள்ளைகள்.

## 3 வயதுக் குழந்தை உட்பட மூவர் மரணம்:

# மயிலிட்டிப்பகுதியில் ஹெலிக்கொப்டர்சூடு

## காயமடைந்த நால்வர் விவரம்

பலாலி மார்ச் 14

நேற்றுக் ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமுற்றுள்ளவர்களின் விவரம்.

1. செல்வி. இரத்தினம் சாந்தி (வயது 18) இரண்டு கைவிரல்களை இழந்த நிலையில் தோளிலும் காயமுற்றார்.

இறந்த இருவரது மூத்த சகோதரி

2. திருமதி. மாணிக்கம் இராசாத்தி (வயது 40) கண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலில்இறந்தவரின் மரணச் சடங்கு வீட்டில் இரண்டாம் முறையும் சூடு

— பலாலி செய்தியாளர் —

பலாலி, மார்ச் 14

பலாலி விமான நிலையத்துக்கு அண்மையில் உள்ள மயிலிட்டி தெற்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு ஹெலிக்கொப்டர் தாக்குதல்களில் 3 வயது, 5 வயது குழந்தைகள் உட்பட மூவர் மரணம் அடைந்தனர்.

தோட்டத்தில் வெங்காயம் பிடுங்கிக்கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் முதலாவது தாக்குதலில் மரணம் அடைந்தார்.

மரணச் சடங்குக்காக இவரது வீட்டுக்கு வந்திருந்தவர்களின்மீது இரண்டாவது தடவை நடத்தப்பட்ட தாக்குதலில் பிரஸ்தாப குழந்தைகள் இரண்டும் இறந்தன.

இறந்த குழந்தைகளில் ஒன்று முதலாவது தாக்குதலில் இறந்த இளம் பெண்ணின் சகோதரர். சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 8. 30 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் இருந்து விமானம் மொன்று புறப்படும் போது அவ்விமானத்தைத் தாக்குவதற்காக போராளிகளினால் குண்டொன்று ஏவப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்தைச் சுற்றிப் பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்று கண்டபடி சுடத் தொடங்கியது.

அப்போது மயிலிட்டி தெற்குப் பகுதியில் தோட்டமொன்றில் வெங்காயம் பிடுங்கிக் கொண்டிருந்த செல்வி இரத்தினம் சுமதி என்பவர் (16 வயது) தலையில் சுடுபட்டு அவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

காலை 9 மணி அளவில் ஹெலிக்கொப்டர் சூடு ஓய்ந்தது.

எனினும் காலை 11.00 மணிக்கு, திரும்பவும் ஹெலிக்கொப்டர் பறந்து வட்டமிடத் தொடங்கியது.

காலையில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தினால் இறந்தவரின் வீட்டில் மரணச்சடங்கிற்காக வந்

(4 ஆம் பக்கம் பார்க்க)



இறந்து கிடக்கக் காணப்படுபவன் ஒரு மூன்று வயதுச் சிறுவன். அரச படையினர் மயிலிட்டியில் நேற்று நடத்திய விமானத் தாக்குதலுக்கு இரையானவன். இவனும் ஒரு பயங்கரவாதியோ ...?...!

தமிழ் மண்ணில் பிறந்த குற்றத்துக்காக மூன்று வயதில் பயங்கரவாதிப் பட்டம் கேட்டு, உயிர் விட்டவேண்டிய கொடுமைதான் என்னே!

தனது செல்வப் புதல்வனை வெறும் சடலமாகக் கண்டு அதிர்ச்சியும், சோகமும் தாளாது நிற்கும் தந்தை. அவர் வாய் பேச முடியாத ஒரு வலது குறைந்த ஜீவன்

அரசாங்கத்திலுள்ளவர்களுக்கு இந்த நெஞ்சுருகும் காட்சியைக் கண்டாவது மனம் நெகிழுமா?

## முது பெரும் தமிழ் அறிஞர் பண்டிதமணி காலமானார்



யாழ்ப்பாணம், மார்ச 14

முதுபெரும் தமிழறிஞர் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிபிள்ளை நேற்று அதிகாலை காலமானார். என்ற செய்தியை மிக வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

அவருக்கு வயது 87.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள அவரது வீட்டிலேயே அவர் காலமானார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று நண்பகல் 10 மணிக்கு அவரது வீட்டில் நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

### 'பண்டிதமணி வீதி'

திருநெல்வேலி கலாசாலை வீதி, 'பண்டிதமணி வீதி' ஆக பெயர் மாற்றஞ் செய்யப்பட இருக்கிறது.

பண்டிதமணி பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்த இடம் கலாசாலை வீதி.

மறைந்த பின்னர் 'பண்டிதமணி வீதி' என்று பெயர் சூட்ட அப்பகுதி மக்கள் நடவடிக்கை எடுத்து உள்ளனர்.

### இறுதியாகச் சொன்னது அனுதாபச் செய்தியே!

பண்டிதமணியின் தக்ஷகாண்டம் உரைநூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1969இல் அரங்கேற்றப்பட்டது.

பேராசிரியர் அ. சின்னத்தம்பியே முன்நின்று இந்நூல் அரங்கேற்றத்தைச் சிறப்புற நடத்தினார்.

சில தினங்களுக்கு முன்னர் பேராசிரியர் சின்னத்தம்பி மறைந்து போனார்.

அவரின் மறைவு பண்டிதமணிக்குத் தெரிவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூளை வெளியேறிய நிலையில் குழந்தையைத் தூக்கிவந்த வாய்பேசாத தந்தை

பலாலி, மார்ச் 14

நேற்றுக்காலை 11.30 மணிக்கு மயிலிட்டி தெற்குப் பகுதியில் ஹெலிக்கொப்டரால் சுடப்பட்டு தலையின் பிடரிப் பக்கம் துளைக்கப்பட்ட மூன்று வயதுக் குழந்தை வாய்பேச முடியாத அதன் தகப்பனால் தூக்கி வரப்பட்டது.

அப்போது தகப்பனின் தோளில் குழந்தையின் மூளையும், இரத்தமும் வழிந்து கொண்டிருந்தன.

சூட்டுச் சம்பவத்தின் போது குழந்தையைத் தூக்கி வைத்திருந்த பெரிய தாயாரான திருமதி. வேலாயுதம் குண்டுமணி (53 வயது) கதறியவாறு நடந்த சம்பவத்தை விபரித்தார்.

அவர் கூறியவாறு:-

காலையில் வெங்காயம் பிடுங்கச் சென்று இறந்த எனது உறவினரின் வீட்டுக்கு நானும், எனது தங்கையுமாகச் சென்றிருந்தோம். திரும்பவும் சுற்றத்தொடங்கிய ஹெலிக்கொப்டரைக் கண்டதும் நின்றவர்கள் ஓடி ஒதுங்கத் தொடங்கினர்.

தங்கையின் குழந்தையை நானே வைத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
14- 3- 1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.22 முதல் 7.52 வரை
ராகுகாலம்
10.52முதல் 12.22வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்

## 2 பேருக்கு மின்கம்ப தண்டனை

கொழும்பு, மார்ச் 14

வாழைச்சேனையில் இரண்டு ஆண்களுக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது.

## நல்லை ஆதீன முதல்வர் அனுதாபச் செய்தி!

பண்டிதமணியின் மறைவு குறித்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் அனுதாபச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

நாவலர் பரம்பரையிலே தமிழுக்கும் சைவத்துக்கும் பெரும் தொண்டாற்றியவர் பண்டிதமணி அவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் அன்னாரை இழந்தது பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் தனது அனுதாபச் செய்தியில் குறிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விரல்களை இழந்த இளம் பெண்

பலாலி, மார்ச் 14

நேற்றுக் காலை மயிலிட்டி தெற்கில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் தனது ஒரு சகோதரியையும், தனது ஒரு சகோதரனையும் இழந்து, தனது இரண்டு விரல்களையும் இழந்து தோளில் காயத்துடன் தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் செல்வி இரத்தினம் சாந்தி (வயது 18)

நேற்றுமாலை மயக்கம் தெளிந்தபோது தனது குடும்பத்தினைப் பலி கொண்ட கோரச் சம்பவத்தைப் பற்றி பின்வருமாறு அவர் விவரித்தார்.

காலையில் வெங்காயம் பிடுங்கச் சென்ற என் தங்கை துடிதுடித்து இறந்த கொடுமையை பார்த்து வேதனையிலிருந்து மீள முடியாத நிலையில் வீட்டில் இருந்தேன்.

மீண்டும் ஹெலிக்கொப்டர் பறப்பதாகக் கூறிப் பலர் ஒதுங்கினர்.

மனம் உடைந்த நிலையில் நான் எவ்விடமும் ஓடிச் செல்லவில்லை. ஹெலிக்கொப்டர் சுட்டது. சகோதரியின் இழப்பைத் தாங்க முடியாது என் அருகில் அழுது கொண்டிருந்த எனது தம்பியின் கழுத்தூடாக குண்டு பாய்ந்தது. அவன் துடிதுடித்து இறந்தான்.

எனது தம்பியை ஓடித் தூக்கினேன். விறைத்தது போன்று சுள்ளிட்ட உணர்வு எனது கைகளில் ஏற்பட்டது. கையைப் பார்த்தேன். இரண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை முதல் ஒரு வாரத்துக்கு தாக்குதல் நிறுத்தம்

## அத்துலத் அறிவிப்பு

கொழும்பு, மார்ச்.14

நாளை (சனிக்கிழமை) தொடக்கம் ஒரு வாரம் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும்.

அக்கால எல்லைக்குள் தீவிரவாதிகள் வெளியில் இருந்து ஆயுதங்கள், ஆட்களைக் கொண்டுவருவதை நிறுத்த வேண்டும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுப் பிற்பகல் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அந்த ஒரு வார கால எல்லைக்குள் தீவிரவாதிகள் எப்படி நடக்கின்றார்கள் என்பது கண்காணிக்கப்படும்.

திருப்திகரமாக இருந்தால் விமானத்தாக்குதல் இடை நிறுத்தம் சித்திரைப் புத்தாண்டு வரை நீடிக்கும்.

அதன் பின்னர் நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழ் அமைப்புக்களுடன் பேச்சுக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அழுது கொண்டிருந்த போது ஹெலிக்கொப்டர் சுட்டது!

நல்லூர்,மார்ச் 14

காலையில் நடந்த தாக்குதலில் இறந்த இளம் பெண்ணின் செத்த வீட்டுக்குப் போய் அழுது கொண்டிருந்தேன். அப்பொழுது வானத்தில் மீண்டும் ஹெலிக்கொப்டர் ஒன்று காணப்பட்டது. அது எம்மை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகளை தீர்த்தது. இதனால் எனக்கு காயம் ஏற்பட்டது.

மயிலிட்டிச் சம்பவத்தில் காயமடைந்த செல்வராசா இராசாத்தி (24 வயது) என்ற பெண் இவ்வாறு தெரிவித்தார்.

இவரது இடது கண்ணை குண்டு துளைத்துச் சென்றது. இதனால் இவரது இடது கண் சத்திர சிகிச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்கு வெளியே ராணுவம் வர பரபரப்பு

நல்லூர், மார்ச் 14

கறுப்புச் சட்டைக்காரரும் பச்சைச் சட்டைக்காரரும் நேற்று யாழ் கோட்டைக்கு வெளியே வந்தனர்.

நேற்று காலை ஒன்பது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளில் காலை அஞ்சலிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 14

இன்று காலை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும், பண்டிதமணியின் ஆத்ம சாந்திக்கு அஞ்சலிப் பிரார்த்தனை செய்யுங்கள்

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தமது இரங்கல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரைச் சந்தையில் சூடுபட்டு இறந்தவர்களுக்கு அஞ்சலி

### பல்கலைக்கழக வளவில் பெருஞ் சனக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கடந்த புதன்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தைக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த இருவரினது பூதவுடல்களும் நேற்று யாழ் பல்கலைக்கழக வளவில் உள்ள அரங்கில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இறந்தவர்களின் உறவினர்களும், ஏராளமான மக்களும் இறந்த இருவருக்கும் அஞ்சலி செலுத்தினர். கொளுத்தும் வெயிலில் கியூவில் காத்து நின்று வரிசைப்படி சென்று மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

இறந்தவர்களின் பூதவுடல்களைச் சுற்றி பல சுலோக அட்டைகள் வைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடந்த சூட்டுச் சம்பவத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் பிரசுரிக்காது விட்டதைக் கண்டித்தும் சுலோக அட்டைகள் வைக்கப்பட்டிருந்தன.

நெல்லியடி, கரவெட்டி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நிலவே மலரே' மூலம் ரகுமானின் பிரவேசம்

மலையாளப் படவுலகில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பவர் ரகுமான். அவர் ''நிலவே மலரே'' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகிலும் பிரவேசித்து விட்டார்.

படத்தின் டைரக்டர் எஸ். ஏ. சந்திரசேகரன் ரகுமானை அறிமுகப்படுத்துகிறார்:

இப்போது மலையாளப் படவுலகில் வேகமாக வளர்ந்து வரும் நடிகர் ரகுமான். குறிப்பாக கல்லூரி மாணவர்கள் இடையே பெரும் புகழ் பெற்று வருகிறார்.

''வேறு மொழியில் நடித்துப் புகழ் பெற்று வருபவரை இங்கே அறிமுகம் செய்யப் போகிறோமே... தமிழ்ப் படத்தில் அவர் எப்படி நடிப்பாரோ?'' என்று எண்ணினேன்.

ஆனால் ரகுமானைத் தேர்ந்து எடுப்பதில் தவறு செய்யவில்லை என்பதை நான்கு நாட்கள் ஷூட்டிங்கிலேயே உணர்ந்தேன்.

நடிப்பில் அவருக்கு உள்ள ஆர்வம் அபரிமிதமானது. பத்து 'டேக்' குகள் எடுத்தால் கூட சலிப்படைய மாட்டார்.

நமக்கு ஆலோசனைகள் எதுவும் சொல்வதில்லை. நாம் சொல்வதை எளிதில் புரிந்து கொள்கிறார். போகப் போக மொழிப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

தமிழ்ப் படவுலகுக்கு ஒரு நல்ல ஹீரோவைக் கொடுத்தேன் என்கின்ற பெருமை எனக்குக் கிடைக்கும் என நம்புகிறேன்.

தினசரி சினிமா

### சரளாவின் புதுத்தமிழ்

இது காலவரை எல்லாப் படங்களிலும் 'கோவைத் தமிழில்' தான் கோவை சரளா பேசி வந்தார்.

ஆனால் ''கடைக்கண் பார்வை'' படத்தில் இவர் 'மெட்ராஸ் தமிழி'ல் கலக்கு கலக்குகிறார்.

இவருடன் இணையாக அதே தமிழில் விளாசுபவர் லூஸ் மோகன்.

# சிலி நாட்டில் மனித உரிமை மீறல்

## ஐ. நா. மாநாட்டில் கண்டனத் தீர்மானம்

ஜெனீவா, மார்ச். 13

சிலி நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை அமெரிக்கா உட்பட்ட பல உலக நாடுகள் கண்டித்துள்ளன.

ஜெனீவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ நா மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் சிலி நாட்டில் அரச படைகள் நடத்தும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி விவரிக்கப்பட்டன.

வாரம் ஒன்றுக்கு 3 பேர் கொல்லப்படுகின்றனர். 25 பேர் கைது செய்யப்படுகின்றனர். 2 பேர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் 14 பேர் நாடுகடத்தப்படுகின்றனர். இந்த அளவுக்கு மனித உரிமை மீறல்கள் சிலியில் இடம் பெறுகின்றன.

இப்படி அயர்லாந்து பிரதிநிதி மாநாட்டில் சொன்னார்.

அமெரிக்க பிரதிநிதி பேசுகையில், மனித உரிமை மீறல் சம்பவங்களை உடனடியாக நிறுத்த சிலி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சிலியைக் கண்டிக்கும் நகல் தீர்மானம் ஒன்றையும் அமெரிக்கா மாநாட்டில் சமர்ப்பித்தது

## வயது வராத மகளுக்குத்திருமணம் கேரள மந்திரி ராஜினாமா!

திருவனந்தபுரம், மார்ச். 13

கேரள மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. எம். பி. கங்காதரன் கடந்த புதன்கிழமை ராஜினாமச் செய்துவிட்டார்

பால்ய விவாகத் தடுப்புச் சட்டத்திற்கு முரணாக பதினெட்டுவயது நிரம்பாத தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தது என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்தே, அமைச்சர் ராஜினாமாச் செய்துள்ளார்.

இத்திருமணத்தை எதிர்த்து அமைச்சர்மீது தனிநபர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதை எதிர்த்து அமைச்சரும் மனு தாக்கல் செய்திருந்தார்.

அமைச்சரின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து அமைச்சர் ராஜினாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

### அன்றூ வருடஇறுதியில் திருமணம்

லண்டன், மார்ச்.13

பிரிட்டிஷ் இளவரசர் அன்றூ, தனது சிநேகிதியான சாரா பெர்குஸன் என்பவரை வருடக்கடைசியில் திருமணம் செய்யவிருக்கின்றார்.

லண்டன் டெயில் மெயில் இச்செய்தியை வெளியிட்டது.

செப்டம்பரில் இத்திருமணம் நடைபெறும் என்று அப்பத்திரிகை செய்தி வெளியிட்டது.

### உண்ணாவிரதம்

இஸ்லாமாபாத், மார்ச் 13

பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததற்காக கைதான 280 பங்களா தேஷ்வாசிகள் தங்களை தாயகத்துக்குத் திருப்பி அனுப்பும்படி கோரி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

## வெளி உலகில்

இனப்பிரச்சினையில் இந்தியா உறுதியாக செயற்படாவிடில்

# விரைவில்நாம் வேறுநடவடிக்கை எடுக்க வேண்டி வரும்

## கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, மார்ச் 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்காவிட்டால் விரைவில் நாம் வேறு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இப்படித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி எச்சரித்தார்.

திரு. மு. கருணாநிதி மேலும் சொன்னதாவது:

இலங்கையில் தமிழ் மக்கள் மீது விமானத் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன.

இது மனித நாகரிகத்துக்கு விடப்பட்ட ஒரு சவால் ஆகும்.

காட்டுமிராண்டித்தனமான இந்த நடவடிக்கையை நிறுத்த இந்திய அரசு தவறிவிட்டது.

இந்திய அரசு இலங்கையின் வலையில் வீழ்ந்து காலத்தை விரயமாக்கியது.

தமிழரின் இன்றைய அவல நிலைக்கு இந்திய அரசே பொறுப்பாளி.

தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்கள் இடம்பெறு என்று இந்தியா இலங்கை அரசுக்கு அறிவிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

### பாகிஸ்தானில் அறுவர் கைது

கராச்சி, மார்ச். 13

வெளிநாட்டு உதவியுடன் இயங்கிய 6 தீவிரவாத சந்தேக நபர்களை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர்.

கைதான சந்தேக நபர்களில் 5 பேர் காணு நாட்டவர். ஒருவர் மட்டுமே பாகிஸ்தானி.

## சீனாவில் உயர்மட்ட அரசியல்வாதிகள் மத்தியில் ஊழல்

பீகிங், மார்ச் 13

சீனாவில் உயர்மட்ட அரசியல்வாதிகள் மத்தியில் நிலவும் ஊழல், ஒழுக்கயீன நடவடிக்கைகளைக் களைய சீனத் தலைவர் டெங்ஷியா ஒப்பிங் முயற்சி எடுத்து வருகிறார்.

மூன்று ஊழல் சம்பவங்கள் குறித்து சீனத் தலைவர் தானே தலையிட்டு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

81 வயதான திரு. டெங் ஊழல்களில் ஈடுபடுபவர்கள் மீது இரக்கம் காட்டத் தயாராக இல்லை என்பதை இச்சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

ஷாங்காய் என்ற இடத்தில் சுமார் 20 பெண்களை மானபங்கப்படுத்தியதற்காக மூன்று பேருக்கு மரண தண்டனை விதிப்பதை சீனத் தலைவர் நேரடியாக அனுமதித்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க் கட்சிகள் சோலில் ஆர்ப்பாட்டம்

சோல், மார்ச், 13

தேர்தல் சீர்திருத்தங்களைக் கோரி எதிர்க்கட்சிகள் தென்கொரியாவின் தலைநகரான சோலில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தின.

சர்வாதிகாரம் ஒழிக என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

1988இல் பதவியில் இருந்து விலகும் முன்னர் அரசமைப்பில் மாற்றங்கள் செய்யுமாறு ஜனாதிபதி சுன் டூ ஹுவானை நிர்ப்பந்திப்பதற்காக ஒரு கோடி கையொப்பங்களைச் சேகரிக்கும் இயக்கமும் தென்கொரியாவில் நடந்துகொண்டு இருக்கிறது.


### விற்பனைக்கு

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு கிடைக்குமிடம்: சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

### எமது புதியவெளியீடுகள்

வெளிநாட்டில் இருந்து இருபது யுத்த சண்டைப் படங்களை இறக்குமதி செய்து இன்று வெளியிடுகின்றோம் என்பதை மினி சினிமா உரிமையாளர்களுக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம். Video Vishon 213, Power House Rd. Jaffna.


### இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

கிளிநொச்சி திருநகர் தர்மசீலன் நாகேஸ்வரி தம்பதியின் செல்வப் புதல்வி தவச்செல்வி இன்று (14-03-86)தனது இரண்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக தமது திருநகர் இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணன்மார், அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார்,அத்தைமார் ஆகியோர் இவரைச் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

இல-176, திருநகர், கிளிநொச்சி

### புனித இயக்கங்களுக்கு உருக்கமான வேண்டுகோள்

1-2-86 சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் எமது நியூ லலிதா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தில் நான்கு இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய வாலிபர்களினால் நாம் பயமுறுத்தப்பட்டதுடன் ரூபா இருபத்து ஐந்து லட்சம் ரூபாய்க்கும் அதிகமான தங்க நகைகளும், 15,000ரூபா ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டது. அந்த தங்க நகைகளில் அரைப் பகுதிக்கு மேற்பட்ட தொகை எமக்குச் சொந்தமானதல்ல. எமது கடை வாடிக்கையாளர்கள் ஓடர் நகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தந்ததும் ஓடர் நகைகளைப் பெற்றுக் கொண்டதற்கான பொறுப்பு நகைகளும் ஆகும். தற்போது எமது வாடிக்கையாளர்கள் அதை மீட்டுத் தருமபடி அவசரப்படுத்துகின்றார்கள்.

50 தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் இக்கொள்ளையினால் தொழிலில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். நாம் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகவேண்டியிருக்கிறது. இதன்மூலம் எமது நாணயத்தையும் நாம் வாடிக்கையாளர்களிடம் இழக்கவேண்டியுள்ளது. எனவே இதைக் கொள்ளையடித்துச் சென்றவர்கள் தாமாகவே மனம் விரும்பி அந்தத் தொகையில் அரைப்பகுதியையேனும் தந்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் அவர்கள் அதைச் செய்யத்தவறும் பட்சத்தில் நாட்டு விடுதலைக்காகப் பாடுபடும் புனித இயக்கங்கள் தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் தங்களது முக்கிய கடமையெனவுணர்ந்து இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு இதை மீட்டுத்தர ஆவன செய்யுமாறு மிகவும் அன்புடனும் பனிவுடனும் கேட்டுக் கொள்கிறேன்.

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
உரிமையாளர்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# முற்றத்தில் நின்றபோது வீட்டின்மேல் குண்டு விழுந்தது

## சகோதரரைப் பறிகொடுத்த விஜேதினி தகவல்

நல்லூர், மார்ச்.14

முற்றத்தில் அம்மாவுடன் நின்ற பொழுது வானத்தில் இருந்து வீட்டின்மேல் குண்டு விழுந்தது. அதனால் தப்பினேன்.

குண்டினால் எனக்கும் எனது அம்மாவுக்கும் காயங்கள் ஏற்பட்டன

புதனன்றுவல்வெட்டித்துறையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலின் போது காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மகேந்திரம் விஜேதினி 15வயது, என்பவர் இப்படித் தெரிவித்தார்

இவருக்கு காலிலும் வயிற்றிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இவரது தம்பியாரான விஜயேந்திரன் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமாகிவிட்டார்.

தாயார் மகேந்திரம் பாலமணி யாழ். ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

விஜேதினி தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை 'உதயன்' செய்தியாளரிடம் விவரித்தார் அவர் கூறியதாவது:-

புதன்காலை ஆறரை மணி இருக்கும். நான் வீட்டினுள் இருந்து படித்துக் கொண்டிருந்தேன்

வானத்தில் விமானங்கள் வட்டமிடும் சந்தங்கள் எனக்குக் கேட்டன.

அப்பொழுது என்னுடைய அம்மா முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்தார்

நான் பயத்தினால் எழுந்து வெளியே ஓடி வந்தேன்.

அப்பொழுது எமது வீட்டின் மேல் பாரிய குண்டொன்று விழுந்து வெடித்தது.

எனது காலிலும் கல்லுப்போல ஏதோ ஒரு பொருள் வந்து அடித்தது.

விமானங்கள் எமது வீட்டுக்குமேலே வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

இவைகளின் இரைச்சல் தாங்க முடியாது காதுகளைப் பொத்திக் கொண்டு அருகில் உள்ள பூந்தோட்டத்தினுள் போய் படுத்துவிட்டேன்.

எமதுவீட்டிற்கு அருகே இருந்த பனைமரங்களும் தென்னை மரங்களும் முறிந்து வீழ்ந்தன

பின்னர் விமானச் சத்தங்கள் ஓய்ந்ததும் பக்கத்து வீட்டிலுள்ளோர் என்னை அழைத்துச் சென்று மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

அதன் பின்பு இங்கு கொண்டுவரப்பட்டேன்.

இப்படி அவர் சொன்னார்.

### மக்கள் இடம்பெயர்வு

கரவெட்டி, மார்ச் 14

புதன் அதிகாலை வல்வெட்டியில் நடந்த விமானத் தாக்குதல்களை அடுத்து வல்வெட்டித்துறை, வல்வெட்டி, பொலிகண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் கரவெட்டி துன்னாலை பகுதிகளை நாடி இடம் பெயர்ந்துள்ளனர்.

## சனசமூக நிலைய நன்கொடைப் பணம் வழங்கப்படுகிறது

சுண்டுக்குளி, மார்ச். 14

யாழ் மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு, 1985 ஆம் ஆண்டிற்குரிய அரச நன்கொடை தற்பொழுது வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தத்தமது பிரிவில் உள்ள உப அபிவிருத்திச்சபை அலுவலகங்களுக்குச் சென்று நன்கொடையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு சி. சி. வரதராஜா தெரிவித்தார்.

ஏ. பிரிவு சனசமூகநிலையங்களுக்கான நன்கொடை 500 ரூபாவில் இருந்து 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது,

'பி' பிரிவு சனசமூக நிலையங்களுக்கு 300 ரூபா வழங்கப்படும்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் [illegible] அல்பிரட் இதற்கான ஏற்பாடுகளை [illegible]னர்.

### கொலகொட் கண்டுகளித்த தீ அணைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

எரியும் வீட்டை எப்படி அணைப்பது என்பது பற்றி செய்முறையாக விளக்கிக் காண்பிக்கப் பட்டது.

தியணைப்புப் படை நிலையத் திறப்பு விழாவின் பொழுது இச் செய்முறை விளக்கம் இடம் பெற்றது

கனடாத் தூதுவர் திரு. டி. எம். கொலகொட் இதைப் பார்த்துக்கொண்டு இருந்தார்.

செய்முறை விளக்கத்தின் பின்னர் கனடாத் தூதர் சொன்னதாவது:

அடிக்கடி எரிக்கும் சம்பவங்கள் இனி யாழ்ப்பாணத்தில் இடம்பெற மாட்டா. தியணைப்புப் படைக்கும் வேலை இருக்காது என்று நம்புகிறேன்.'

இப்படித் திரு. கொலகொட் சொன்னார்.

### சங்கானையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, சிறப்பு விருந்தினராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம், சங்கானை அபிவிருத்திச்சபை உப அலுவலக பிரதம லிகிதர் திரு. [illegible] கிருஷ்ண[illegible] ஆகியோர் கலந்து கொள்வர்.

### புங்குடுதீவில் உடற் பயிற்சி

புங்குடுதீவு, மார்ச்.14

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலையின் உடற்பயிற்சிப் போட்டி இம்மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளைப்புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. ஆர். எஸ். செல்லத்துரை மேற்கொண்டு வருகிறார்.

### புதிய நூலகம்

உடுப்பிட்டி. மார்ச் 14

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை கட்டைவேலி உப அலுவலகப் பகுதியில் நூலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கென கட்டைவேலி உப அலுவலகத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மரணச்சடங்குகள் கல்லாரையில் நடந்தன

சுன்னாகம், மார்ச் 14

வல்லையில் நடைபெற்ற விமான குண்டுத் தாக்குதல்களில் இறந்த மயில்வாகனம் வல்லிபுரம் (வயது 56) அவரது துணைவியார் தங்கரத்தினம் ஆகியோரின் மரணச் சடங்குகள் புதன்கிழமை மல்லாகத்தில் உள்ள கல்லாரையில் நடைபெற்றன.

இளைப்பாறிய மறியல் சாலை உத்தியோகத்தர் வல்லிபுரம் சிறந்த சமூக சேவையாளர் என மரணச்சடங்கில் புகழ்மாலைகள் சூட்டப்பட்டது.

மரணச் சடங்கில் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### சென்சார்ள்ஸ் முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச்.14

யாழ்ப்பாணம் கல்வி வட்டாரம் பாடசாலைகளுக்கிடையே நடத்திய உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் அணியில் யாழ் சென்சார்ள்ஸ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றது.

### இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி



ஐயம்பிள்ளை ஜெயக்குமாரன்
(தொழில் நுட்பவியலாளர், உள்ளூராட்சித் திணைக்களம்.)
தோற்றம்: 7-12-1957 மறைவு: 14-3-1984
திதி: 23-3-86

உமது பிரிவால் வாடும்,
அம்மா, அப்பா, தங்கை, தம்பிமார்,
'உதயபவனம்',
கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்தையும் பாருங்கள். தன்னில் நம்பிக்கை வைத்தவர்கள்தான் பலம் பொருந்தியவர்களாகவும் பெரியோர்களாகவும் உயர்ந்துள்ளதைக் காண்பீர்கள்.

—சுவாமி விவேகானந்தர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805, 22073

14-03-86 த. பெ. 23


## இது தகுமோ, தர்மம் தானோ?

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பெரிய ''குண்டு'' ஒன்றைத் தூக்கிப் போட்டிருக்கிறார்!

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசு இந்தியாவுடன் பேசத் தேவையில்லை. தமிழர் அமைப்புக்களுடனேயே பேச்சுக்களை நடத்தட்டும். இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவின் நல்லெண்ண மத்தியஸ்தத்தாலும் உதவியாலும் இனப்பிரச்சினைக்குநியாயமான தீர்வுகாணலாம். தமிழர்கள்படும் கஷ்டங்களுக்கு முடிவு காணலாம். இவ்வாறுக எதிர்பார்த்த தமிழர் உள்ளங்களில் திரு. காந்தியின் அறிவிப்பு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. தமிழ்த் தலைவர்களும், சிங்கள அரசாங்கங்களும் கடந்த முப்பது வருடங்களாகப் பேசிப் பேசித் தீர்வுக்கு வரமுடியாமல்போன புரையோடிய புண் இந்த இனப்பிரச்சினை.

தமிழனைத் தாங்கள் ஆளவேண்டும், ஆட்டிப் படைக்கவேண்டும் என்ற எண்ணம் சிங்களத் தலைவர்கள் சிந்தையை விட்டு இன்னும் அகலவில்லை. இது ஒரு சிங்களநாடு, மற்றவர்கள் தமக்கு வழங்கப்படும் சலுகைகளோடு இருப்திப்படவேண்டும். அதற்குமேல் எதுவும் கேட்கக்கூடாது.

இந்த மனப்போக்கு சிங்களத் தலைவர்களையும், அவர்களை ஆட்டிப் படைக்கும் பௌத்த சங்கங்களையும் விட்டு விலகும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

மேன்மேலும் அந்த எண்ணத்தையே — கருத்தையே அவர்கள் இறுகக் கட்டிப் பிடிப்பவர்களாக இருக்கிறார்கள் ஏனைய மக்களும் சமத்துவத்துடனும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் அதற்கு வகைசெய்யும் விதத்தில் தமது நிலையைத் தளர்த்தி விட்டுக்கொடுக்கவேண்டும் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி அதனைக் கட்டி வளர்க்கவேண்டும் என்ற நினைவே அவர்களிடம் இல்லை.

தமது இழந்த உரிமைகளைப் பெறவேண்டும். சொந்த மண்ணை மீட்கவேண்டும். உலகில் ஏனையோருக்குச் சமமாக, சுதந்திர புருஷர்களாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும். தம்மைத் தாமே ஆண்டு, தமது காரியங்களைத் தாமே கவனிக்கவேண்டும். இந்த அபிலாஷைகளை அடைய நினைக்கும் தமிழர் அமைப்புகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் பேச்சுவார்த்தை நடந்து நியாயத் தீர்வு காணப்படும் என்று எண்ணுவது முயற்கொம்பு.

மூன்றாமவர் ஒருவரின் சமரசத் தலையீடு இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று எண்ணவும் இடமில்லை. நியாயமான தீர்வு ஒன்றைக் கண்டாக வேண்டும் என்ற உள்ளார்ந்த விருப்பம் அரசுக்கோ அல்லது சிங்களத் தலைவர்களுக்கோ கிடையாது.

இந்தியாவின் நல்லெண்ணத்துடன், அதன் மத்தியஸ்தத்துடன் இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க இலங்கை உண்மையாகவே விரும்பி இருந்தால் இந்திரா காந்தி உயிர் வாழ்ந்தபோதே வெகு இலகுவில் நல்ல முடிவு ஒன்றைக் கண்டிருக்கலாம்.

ராஜீவ் காந்தியையும் ஒரு வருடத்திற்கு மேல் ''பேய்''க்காட்டி விட்டார் ஜே. ஆர். அதனால் ராஜீவ் சலிப்புற்றுப் போனாரோ என்னவோ!

தமிழ் மக்களை சிங்களப் பேரினவாத அரசு அழித்துக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியான கட்டத்தில் ராஜீவ் தமிழர் பிரச்சினையைக் கைகழுவி விடுவது சரியல்ல; நியாயமும் அல்ல.

இலங்கை அரசின் உள்நோக்கத்தையும் அதன் போக்கையும் அவர் உணர்ந்திருக்கிறார். இத்தனை மாதங்களாக இதில் அக்கறை காட்டி விட்டு இப்போது 'தொப்'பெனப் போட்டுவிட்டு விலகிநிற்க நினைக்கக்கூடாது. இலங்கை அரசை நிர்ப்பந்திக்காது ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும்.

சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டும் இலங்கையில் ஓர் இனம் அழிக்கப்படுகிறது. அதனை நீங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கலாமா என்று உலக அரங்கில், சர்வதேச ஸ்தாபனங்களில் நியாயம் கேட்கவேண்டும்.

அண்மையில் நடந்த ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க இந்தியா எடுத்துவரும் முயற்சியைப் பல நாடுகள் வரவேற்றன; பாராட்டின. அந்த நிலைப்பாட்டை மேலும் வளர்க்கவேண்டும்.

சர்வதேச அபிப்பிராயத்துக்குப் பணியாது இலங்கை அரசாங்கம் தனித்து நின்று இயங்குவது என்பது இயலாத காரியம்.

எனவே இந்த இக்கட்டான நெருக்கடியான நிலையில் இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தைக் கைகழுவி விடுவது அபத்தம்; அநியாயம்.

இத்தனை காலமாக இதில் தலையிட்டு, ஓரளவுக்கு இலங்கை அரசின் கபடத் திட்டங்களுக்கு இடங் கொடுத்துவிட்டு, இப்போது விலகிக்கொள்வது தமிழர்களை நட்டாற்றில் தள்ளி விடுவதற்குச் சமமானது. அது தகுமோ, தர்மம்தானோ?

எனவே திரு. ராஜீவ் அவர்களே! உங்கள் முடிவை மாற்றுங்கள். நல்லதீர்வு ஒன்று கிடைக்கும்வரை உங்கள் பணியைத் தொடருங்கள். அது உங்களுடைய பொறுப்பும், கடமையுமாகும்.

# அப்பர்பெருமான் அருளும் அழகுப்பவனி விழாவும்



கீரிமலையிலிருந்து புறப்பட்ட அப்பர் பெருமானின் அழகுச் சிலை பவனி விழா தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

ஆண்டின் நிறைவும் செறிவும் அனுபவ முதிர்ச்சியும் அடையப் பெற்றதினால் ஆளுடைய பிள்ளையினால் 'அப்பர்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் நாவுக்கரசர்.

எதையும் எவர் மனதிலும் இருக்கத் தக்க வகையில் எடுத்துரைத்தமையினாலும் அப்பர்என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். சமயச்குரவர்களில் குலத்தாலும் கொள்கையாலும் வேறுபட்டவர் அவர்.

சைவம் சார்ந்த அப்பர். சமணம் புகுந்து, மீண்டும் சைவ நன்நெறியில் தலைப்பட்டு, உழவாரத் திருப்பணி மேற்கொண்டு சரியை, நெறியைத் தரணிக்கு உணர்த்தியவர்.

திலகவதியாரின் திடசிந்தையால் திருநாவுக்கரசர் என்ற நன்முத்து சைவ உலகிற்குக் கிடைத்தது.

தன் குலம் விளங்க தம்பியார் உளராக வேண்டும் என்ற தமக்கையாரின் தளராத உறுதியால் திருநாவுக்கரசர் திருவருள் நலம் வாய்ந்த செம்மலாக மாறினார்.

ஞானக்கதிர்

புகழனாரின் புகழ்பூத்த மைந்தராக இருந்த போதிலும், திலகவதியாரின் தியாகத்தின் திருநலம்மிக்க சேயாகவும் விளங்குகின்றார்.

நன்றி மறவா நாவரசர் தமக்கையாரை தக்கபடி புகழ்ந்துள்ளார். ஈன்றாளுமாய், எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய் என்பதன் மூலம் உடன் பிறப்பின் உயரிய தன்மையை உளமாரப் போற்றியுள்ளார்.

அஞ்சாமை என்ற நெஞ்சுரத்தில் விஞ்சி நின்றவர் நாவுக்கரசர். நாமார்க்கும் குடியல்லோம் என்பதே அவரின் இதய கீதம். அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை என்று அவர் அறுதியாகக் கூறுவதிலிருந்து அரனின் அருள் வலிமை அதிகமாய்ப் பெற்றவர் என்பதை அறியலாம்.

இறையருளில் ஆழ்ந்திருப்பவர்க்கு எவ்வித இடையூறும் இடர் செய்யாது என்பதற்கு நாவரசர் வாழ்க்கை வரலாறு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

மதம் மாறிய தரும சேனருக்கு அதம்செய்ய விரும்பிய அமணர்கள் இதமில்லாத செயல்களைக் கதமுடன் செய்தனர். அவரை எப்படியாவது அழித்துவிடவேண்டுமென்பதே அவர்கள் எண்ணம்.

குருமார்கள் தரும சேனரை பெருந்தணல் மிக்க நீற்றறையில் இடும்படி சொன்னார்கள். அரசனும் அவ்வண்ணமே செய்க என ஆணையிட்டான்.

ஏவலாளர்களும் தரும சேனரை வெப்பம் மிகுந்த தழல்களோடு கூடியிருந்த பெரியதொரு நீற்றறையிலிட்டு ''திருகுகரும் தாழ் கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தார்கள். அந்தச் சுண்ணாம்புக் காளவாயானது இரும்புப்பாதைக் காரர்கள் அமைப்பது போல பெரிய அறைகளுடன், கதவுடன் கூடியதாய் இருந்தது'' அதனுள் வைக்கும் கற்களும் நீறாக ஆகிவிடுமானால் மனித உடல் என்ன ஆகும்! அதனுள் எழுந்தருளியிருந்த நாயனார் என்ன எண்ணினார்கள்.

ஈசனடியார்குத் துயரமும் வருமோ! இது நீற்றறை அன்று பிறவி என்கின்ற கொடிய வெய்யிலில் அல்லலுறும் ஆன்மாக்கள் அபயப்புக்கும் இனிது இருக்கும் சிவ பெருமானது திருவடியே இது.

அந்தத் திருவடி நீழலிலே இருக்கின்றேம் எனத் துணிந்து அந்தப்படி உறைப்புடைய நினைப்புடனே இருந்தார். அந்த வெப்பமான நீற்றறையானது இறைவனது திருவடி நிழலேயாகிக் குளிர்ந்தது குற்றமற்ற வீணையின் ஒலியும், மாலைக்காலத்தில் விளங்கும் நிறை மதியமும் மெத்தென வீசும் தென்றற் காற்றும் நிறைந்த இளவேனிற் காலமும் இத்தனையும் இருந்து அனுபவிக்கும் இடமாக வண்டுகள் பண்களை மிழற்றும் நீர்ப்பூக்கள் நிறைந்த மலர்ப் பொய்கையும் போல் ஆயிற்று.

**பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

ஐம்புலன்களும் துன்பமாகிய நீற்றறையின் வெப்பமாகிய காற்றும் தளதள என்று கற்கள் வேகும் ஒலியும் தமது தன்மை மாறி இன்பம் தரும் பொருளாக மாறின. ஏழுநாட்கள் சென்ற பின் திறந்து பார்த்தார்கள். என்ன அதிசயம்! ஒரு ஊனமும் இல்லாது ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி மகிழ்ந்து அம்பலவரது திருவடியமுதுண்டு தெளிவுடன் வீற்றிருந்த திருநாவுக்கரசரைக் கண்டார்கள்.

அருளை அரணாக உடையவர்க்கு அல்லல் ஏற்படாது என்பது நாவரசர் வாழ்க்கை புகட்டும் நல்ல படிப்பினை. அப்பர் அடிதொழுது அல்லல் தீர்ப்போம்.

ஆனந்த வெள்ளத்திடைமூழ்கி அம்பலவர் தேவந்த மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி, ஊனந்தானிலராகி உந்திருந்தார் தம்மைக் கண்டு, ஈனந்தங்கியதிலதாம் என்ன அதிசயமென்றார்.

## யாழ். முஸ்லிம்கள் நடந்து கொள்ளும் முறை மகிழ்ச்சி தருகிறது

### பொம்மை வெளியில் கொலகொட்

நல்லூர், மார்ச். 14

இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் எத்தனையோ பிரச்சினைகள் இருந்த போதிலும் இங்குள்ள முஸ்லிம் மக்கள் இவர்களுடன் அந்நியோன்யமாகப் பழகும் முறையைக் கண்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொம்மை வெளியில் அமைக்கப்பட்டுள்ள நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் கனேடிய உயர் ஸ்தானிகர் திரு டி. எம் கொலகொட் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு கனேடியத் தூதுவருடன் அவரது அபிவிருத்தி ஆலோசகர், மாநகரசபை ஆணையாளர், யாழ். அரசாங்க அதிபர், பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் அங்கு உரை நிகழ்த்துகையில் 'கடந்த பல ஆண்டு காலமாக கோண்டாவில் நீர் விநியோகத் திட்டத்தில் இருந்தே இப்பகுதிக்கு நீர் கிடைத்து வந்தது.

ஆனாலும் அவற்றில் பல சிரமங்கள் இருந்து வந்தன. யாழ் மாவட்டத்தில் நான்கு நீர் விநியோகத் திட்டங்களை யுனிசெப் உதவியுடன் உருவாக்கினோம்.

அவற்றுள் ஒன்றுதான் இன்று பூர்த்தி செய்யப்பட்டு, இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

முஸ்லிம் இளைஞரான சுபியான் பேசுகையில் எமது மக்களுக்கு கனேடிய அரசாங்கம் தொடர்ந்தும் உதவி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

### சுபாஸ் விருந்தில் கனேடிய தூதர்

நல்லூர், மார்ச். 14

கனேடிய உயர் ஸ்தானிகருக்கும் அபிவிருத்தி ஆலோசகருக்கும் நேற்று முன்தினம் ஹோட்டல் சுபாஸில் மதியபோசன விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

யாழ் மாநகரசபை ஆணையாளரினால் வழங்கப்பட்ட இந்த வைபவத்தின் போது காலஞ்சென்ற சேர். பொன் இராமநாதனின் வாழ்க்கை வரலாறு சம்பந்தமான இரண்டு அத்தியாயங்கள்கொண்ட புத்தகம் ஒன்றுகனேடியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட இப்புத்தகத்தை 'மில்க்வைற்' அதிபர் திரு. க. கனகராசா யாழ் ஆணையாளரிடம் வழங்கியிருந்தார்.

பிற்பகல் 2.30 மணியளவில் கனேடியத் தூதுவரும் அபிவிருத்தி ஆலோசகரும் பலாலி சென்று விசேடவிமானம் மூலம் கொழும்பு திரும்பினர்.

## சமய சந்திகளில்

### சூராவத்தையில் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், மார்ச். 14

சூராவத்தை முத்துமாரியம்மன் கோயிலில் இலட்சார்ச்சனை இன்று (14. 3. 86) முதல் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். 11 ஆவது நாள் சங்காபிஷேகமும் நடைபெறும். இதற்கு பிரதமகுருக்கள் பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வரக்குருக்கள் தலைமை வகிக்கின்றார்.

### சுன்னாகம் பிரஜைகள் குழு செயற்குழுகூட்டம்

சுன்னாகம், மார்ச். 14

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் செயற்குழுக் கூட்டம் நாளை 15ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுகிறது.

தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

உடுவில் தமிழ் மான் பாடசாலையில் பிற்பகல் 4-00 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

## மக்கள் அவையின் நோக்கம் மக்களின் வளமான எதிர்காலமே

காங்கேசன்துறை, மார்ச். 14

மக்கள் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கான திட்டங்களை செயல்படுத்துவதே மக்கள் அவையின் நோக்கமாகும். இந்த அவையின் மூலம் எமது மக்களின் எதிர்காலத்தை வளமுறச் செய்ய நாம் வழிவகுக்க வேண்டும்.

வலி—வடக்கு மக்கள் அவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து பேசிய மக்கள் அவை அமைப்பாளர் திரு ச. செந்தூர்ராஜா மேற்கண்டவாறு கூறினார்.

இரிமலை பிரஜைகள் குழுத்தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலி வடக்கு பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், பிரஜைகள் குழுக்கள், சமாதான சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

திரு செந்தூர்ராஜா மேலும் பேசுகையில் மக்கள் அவை அரசியல் கட்சியோ, விடுதலை இயக்கமோ அல்ல. சமாதானசபை, விழிப்புக் குழு, உணவு உற்பத்திக் குழு, சுய பொருளாதார திட்டக் குழு, தகவல் சேகரிப்புக் குழு, மகளிர் ஒருங்கிணைப்புக் குழு போன்ற 6 அம்சங்களை செயற்படுத்தி மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதே இதன் நோக்கமாகும்.

'விடுதலை பெற்ற பின்னர் நாம் வேறு நாடுகளில் தங்கியிருக்காமல் எமது தேவைகளை நாமே நிறைவேற்ற இந்த மக்கள் அவைகள் மூலம் வழிசமைக்க வேண்டும்' என்றார்.



*பொய்யாமொழி*

**குறள்:**

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந் தற்று.

**பொருள்:**

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

மாதகல், சில்லாலை, இளவாலை பகுதியில்

## கண்டனப் பேரணியும் எதிர்ப்புக் கூட்டமும்

சண்டுக்குளி, மார்ச் 14

ஆறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டனப் பேரணி ஒன்றையும் மாபெரும் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றையும் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் இணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த கண்டனப் பேரணியும் எதிர்ப்புக் கூட்டமும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு, ஈழவர் முன்னணி கிராமிய உழைப்பாளர் சங்கம், 'அன்னையர் முன்னணி, விழிப்பு மன்றம், தேசிய மாணவர் சங்கம் ஆகியவை இந்த இணைப்புக் குழுவில் இடம்பெறுகின்றன.

மாதகல், சில்லாலை ஆகிய இடங்களில் இருந்து காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும் கண்டனப் பேரணி முற்பகல் 11 மணிக்கு இளவாலை புலித கென்றிஸ் விளையாட்டு மைதானத்தை அடையும்.

இதைத் தொடர்ந்து இங்கு மாபெரும் எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும்.

பின்வரும் ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இவை நடத்தப்படுகின்றன.

* ஆயுதப் படையினரை தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து உடன் வெளியேற்று
* அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்கு.
* தமிழ் மக்களின் சுயநிர்ணய அங்கீகரித்து அரசியல் தீர்வு காண்.
* தமிழ்ப் பிரதேசங்களில் இனர்தியால் திட்டமிட்டு மேற்கொள்ளும் சகல குடியேற்றங்களையும் நிறுத்து.
* சகல அரசியற் கைதிகளையும் நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்.
* மலையகத் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து வன்செயல்களையும் உடன் நிறுத்து.

### சுன்னாகம் கிராமிய வங்கி திறப்பு விழா

சுன்னாகம், மார்ச் 14

சுன்னாகத்தில் புதிய கிராமிய வங்கித் திறப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் தலைமையில் சங்க தலைமையகக் கட்டடத்தில் இந்த வைபவம் நடைபெறும்.

மக்கள் வங்கி வட பிராந்திய முகாமையாளர் திரு மு. கணேசசுந்தரம் புதிய கிராமிய வங்கியைத் திறந்து வைப்பார்.

கிராமிய வங்கியின் பயன்கள் பற்றி திரு சி. குமாரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

### அடகு வைத்தோர் சங்கக் கூட்டம்

நல்லூர், மார்ச் 14

அடகு வைத்தோர் சங்கப் பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

## ஏட்டுக் கல்வியுடன் நிற்காது உடற்பயிற்சியும் வேண்டும்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

கரவெட்டி, மார்ச் 14

ஏட்டுக் கல்வியுடன் நில்லாது உடற்பயிற்சியிலும் நாம் ஈடுபடவேண்டும்.

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் திரு. சுப்பிரமணியம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விளையாட்டுப் போட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார்.

திரு. சுப்பிரமணியம் மேலும் உரையாற்றுகையில், கரவெட்டி மிகவும் பேர்போனதாக விளங்கும் இக் காலத்தில் வீரர்கள் செறிந்த இடமும் கரவெட்டி என்னும் போது பெரும் மகிழ்ச்சி தருகிறது.

இவ் வீரர்களை வளர்த்தவை பாடசாலைகளே.

ஆனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சியோ விளையாட்டுப் போட்டிகளோ தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெறுவதில்லை.

கல்வி பயில்வது பணத்துக்காக அல்ல அறிவிற்காகவே என்று கூறினார்.

வைபவத்தில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு. [illegible] அதிபராகக் கடமைக்கு வந்து 5 ஆண்டுகளில் விக்னேஸ்வராக் கல்லூரியில் பல முன்னேற்றங்களைச் செய்துள்ளார் என்றார்.

மேலும் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. ஈஸ்வரபாதம், வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொன் கணேசன், உதவித் திட்டமிடல் அதிகாரி திரு எஸ். சுவாமிநாதன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு. என் சச்சிதானந்தம் ஆகியோரும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

விக்னேஸ்வராக் கல்லூரி [illegible] ளாளர் திரு. ஜெயரத்தினம் நன்றியுரை ஆற்றினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நியூஸ்டார்
மல்லாகம்
O/L விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: வெள்ளி
ஞாயிறு - மாலை 5-15 மணி
சனி - பி.ப 2-30 மணி

# உதயன்

14. 03. 1986 வெள்ளிக்கிழமை

பிறையிற்
கொக்குவில்
O/L விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: திங்கள்
வெள்ளி - மாலை 4 மணி
ஞாயிறு - பகல் 1 மணி

# அத்துலத் ஏலாமையை கொழும்பு உணரும்வரை இந்தியா பொறுத்திருக்கும்

புதுடில்லி, மார்ச் 13

காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தமிழரைப் பணிய வைக்கக் கூடிய நிலையில் அமைச்சர் அத்துலத் இல்லை என்பதை கொழும்பு விரைவில் உணரும். அது வரை இந்தியா பொறுத்திருக்கும்.

இவ்வாறு 'இந்து' நாளிதழின் பிரதம செய்தியாளர் திரு ஜி. கே. ரெட்டி எழுதியுள்ளார்.

அவர் தனது அரசியல் கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழ்ப் போராளிகளை ஒழித்துக் கட்டிய பிறகே தமிழ் மிதவாதிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் இந்திய அரசுக்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ தெரியப்படுத்தி விட்டார்கள்.

தம் வழிமுறைகளைப் பயன்படுத்தி இச்சவாலை ஏற்றுக் கொள்ளத் தமிழ்ப் போராளிகளும் தயாராகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 2,000 முதல் 3,000 வரையில் நன்கு பயிற்றப்பட்ட ஆயுதந் தாங்கிய போராளிகள் தற்சமயம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

**பணிவான வேண்டுகோள்**

எனது 40ஸ்ரீ6113 இலக்க இ எல். எப் 250 நீலநிற றக் 4. 3. 86 அன்று எழுதுமட்டுவாளில் இனந்தெரியாத கோஷ்டி ஒன்று திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றது இது வரை இவ்வாகனம் திருப்பித் தரப்படவில்லை. இவ்வாகன இழப்பால் எனது குடும்பம் பாதிப்படைந்துள்ளது தயவு செய்து எனது வாகனத்தை மீட்டுத்தருமாறு எமதுபுனிதமான இயக்கங்களை வேண்டுகின்றோம்.

செ. செல்வகுலேந்திரன் குடும்பத்தினர்
உடுத்துறை, தாளையடி.

இன்று மங்களகரமான
## திறப்பு விழா
## தேவா போட்டோ
அன் பிக்ஷர் எம்போறியம்
(சிறந்த கலர்ப் படப்பிடிப்பாளர்களும் பட விற்பனையாளர்களும்)

இடம்: கே. கே. எஸ் வீதி, இணுவில்.
காலம்: 14 - 03 - 86 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 8 மணிமுதல் 9 மணிவரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படும்

திருமண வைபவங்கள், ருதுசோபன விழாக்கள், பிறந்தநாள் வைபவங்கள், மற்றும் எந்த ஒரு நிகழ்ச்சியானாலும் சிறந்த முறையில் கலர்ப்படங்களை எடுத்துக்கொள்ளலாம்.

இத்துடன் புதுமனைச் சுவாமிப் படங்கள், திருமண வாழ்த்துப்பாக்கள் மற்றும் படங்களும் பிறேம் செய்துகொள்ள இணுவிலில் ஒரே ஸ்தாபனம்,

DEVA PHOTO
& PICTURE EMPORIUM
(Specialists in colour photography & Framing)
K. K. S ROAD, INUVIL.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தேவா போட்டோ அன் பிக்ஷர் எம்போறியம்

நீத்தார் பட்டியல்

## இலக்கிய கலாநிதி
### பண்டிதமணி
### சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
### சிவபதம் எய்தினர்

முதுபெரும் தமிழறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சிவபதம் எய்தி விட்டார்கள் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

ஆத்ம சாந்திக் கிரியைகளின் பின்னர் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் பொதுமக்களின் அஞ்சலிக்காக திருநெல்வேலி கலாமன்றத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்குத் திருநெல்வேலி மயானத்தில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

## நல்லை ஆதீன முதல்வர் . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டுள்ளார்.

குறைவிலாத நிறைவினர் பண்டிதமணியுடன் கடந்த 37 ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் செயலாளரான திரு அ. பஞ்சாட்சரம்.

திரு பஞ்சாட்சரம் வெளியிட்ட அனுதாபச் செய்தி வருமாறு;

பண்டிதமணியின் ஒவ்வொரு வார்த்தையும் எழுத்தும்எல்லோருக்கும் ஞானப்பொக்கிஷமாக அமைந்தவை. அன்னாரது முதிர்ச்சியான பேச்சிலே எழுத்திலே, தரிசனத்திலே நிறைவு இருக்கும் பண்டிதமணி ஐயா குறைவிலாத நிறைவினர் ஆவர்

இப்படி திரு. பஞ்சாட்சரம் செய்தியில் கூறியுள்ளார்.

எழுத்தாளர் சங்கம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் பண்டிதமணியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளது.

அனுதாபச் செய்தி வருமாறு;

ஈழத்து இலக்கிய உலகில் முதறிஞராகத் திகழ்ந்த இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளையின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

இப்படி அந்த அனுதாபச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## அழுது கொண்டிருந்த . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சையின் பின் அகற்றப் பட்டு விட்டது

இவருக்கு காலிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டன.

இவரது கணவனும் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து செல்வராசா இராசாத்தி 'உதயன்' செய்தியாளரிடம் தொடர்ந்து சொன்னதாவது;

காலை எட்டு மணியிருக்கும் வானத்தில் பறந்து வந்த இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மயிலிட்டிப்பகுதியில் சரமாரியாகச் சுட்டுத் தள்ளின.

அப்பொழுது எமது உறவினர் ஒருவரின் பிள்ளை துப்பாக்கி சூடு பட்டு இறந்து விட்டதாக அறிந்து அவரது வீட்டிற்கு சென்று அங்கிருந்து அழுது கொண்டிருந்தேன். அங்கு சுமார் 20 பேர் வரையில் இருந்திருப்போம்.

மீண்டும் 11 மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று அங்கு வந்தது.

நாம் அதைப்பற்றி அக்கறைப்படவில்லை.

பறந்து வந்து கொண்டிருந்த இந்த ஹெலிக்கொப்டர் திடீரெனத் தாழப்பறந்து எம்மீது வேட்டுக்களைத் தீர்த்தது.

அப்பொழுது என் கண் முன்னால் நின்ற ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் சூடுபட்டு துடிதுடித்து இறந்தான்

எனது கால்களையும் ஒரு கண்ணையும் குண்டுகள் தாக்கின.

இதனால் நான் நிலத்தில் விழுந்து உருண்டேன். தொடர்ந்தும் குண்டுகள் வருவதைக் கண்டு குப்புறப்படுத்து விட்டேன்.

எனது கணவருக்கும் காயம் ஏற்பட்டது.

பின்னர் அயலவரின் உதவியுடன் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் இங்கு கொண்டு வரப்பட்டேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

## நாளை......

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்படலாம்.

இந்தியாவின் உதவியுடனோ, அல்லாமலோ இப்பேச்சுக்கள் நடத்தப்படலாம். தமிழ் நாடு சென்ற அகதிகள் மீண்டும் இலங்கை திரும்பலாம்.

நாளைதொடக்கம்காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை அவர்கள் இலங்கைக் கரைக்கு வரலாம்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

அமைச்சர் இச்செய்தியாளர் மாநாட்டை அவசரமாகக் கூட்டினார்.

பிற்பகல் 12 30மணிக்குத் தான் மாநாடு பற்றி செய்தி ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு இம்மாநாடு நடந்தது.

## கோட்டை - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணி அளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

சுமார் 25 பேர் கொண்ட இப்படையினர் கோட்டைக்கு வெளியேயுள்ள மைதானத்திலும் யாழ் மாநகராட்சி மன்றத்தின் அருகேயும் ஆயுதபாணிகளாக நின்றனர்.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

வாகனங்கள் யாவும் வேறு பாதையால் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

15 நிமிட மளவில் வெளியே நின்ற இவர்கள பின்னர் முகாமுக்கு திரும்பிச் சென்றுவிட்டனர்.

## விரல்களை . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

விரல்கள் இல்லாமல் இருந்தது. பின்னர்மயக்கமுற்றேன்.

எனது தம்பியும் இறந்துவிட்டதைப் பின்பு தான் அறிந்தேன்.

எங்கள் குடும்பத்தை மட்டும் தொலைக்க வந்ததுபோல நடந்த சம்பவத்தில் நானும் தப்பியிருக்கக் கூடாது.

இப்படித் தேம்பித் தேம்பி அழுதார் இப்பெண்.

## மூளை . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தேன் எனது தோளில் நித்திரையாகக் கிடந்த குழந்தையுடன் நானும் ஒதுக்கிடம் பார்த்துச் சென்றேன் ஹெலிக்கொப்டர் சுடத் தொடங்கியது. எனக்கு மேல் சூடுபடுவது போன்று உணர்ந்தேன்.

எனது தோளில் கிடந்த குழந்தை தலையை ஒரு முறை தூக்கியவாறு சத்தமெதுவும் இன்றித் துடித்தது.

குழந்தையைத் தூக்கித் தடவிப் பார்த்தேன். இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. தலைக்குள்ளிருந்து வெள்ளைப் பொருள் ஒன்றும் வந்து கொண்டிருந்தது.

குழந்தையைக் கட்டிப் பிடித்தவாறு மரங்களுக்குள் ஒதுங்கினேன் சூட்டுச் சத்தம் ஓய்ந்தவுடன் குழந்தையின் தகப்பனுடன் ஆஸ்பத்திரிக்கு ஓடினேன்.

குழந்தைக்கு விழுந்த குண்டு என்னைத் துளைத்திருக்கக் கூடாதா?

இப்படிக் கூறிய நிலையில் இவர் மயக்கமுற்றார்.

## பாடசாலை - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

இன்றைய தமிழ் ஆசிரியர் உலகில் பெரும் பகுதியினர் பண்டிதமணி ஐயா அவர்களினால் உருவாக்கப்பட்டவர்கள். ஐயா அவர்கள் ஆசிரியர் பரம்பரையை உருவாக்கிய கல்விப் பெருங்கடல். அவர் பழமைக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலம்.

திண்ணைப் பள்ளியில் கல்வியைத் தொடங்கிய அவர் நாவலர் பாடசாலையிலும் தொடர்ந்தார். சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசானாக வீற்றிருந்து கல்விக் கதிரைத் திசையெங்கும் பரவவிட்டார்.

இலக்கியத்திலும் பழமையையும் புதுமையையும் தெரிந்து, புரிந்து உணர்ந்த ஒருவராக நம்மிடையே நடமாடினார்.

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள சகல பாடசாலைகளும் இன்றைய காலைப் பிரார்த்தனையில் ஆத்மசாந்திக்காக அஞ்சலிக்க வேண்டுவதுடன் ஐயா அவர்களின் சிறப்பியல்புகளை எமது மாணவமணிகள் தெரிந்துகொள்ளக்கூடியதாக உரைகளும் நிகழ்த்தப்படவேண்டும்.

## இறுதியாகச் சொன்னது - - -

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டது. மிகவும் மனம் வருந்தினார் பண்டிதமணி.

பேராசிரியரின் மறைவு குறித்து அனுதாபச் செய்தி ஒன்றை பண்டிதமணி சொல்லச் சொல்ல, திரு பஞ்சாட்சரம் எழுதினார்.

அந்தச் செய்தி பேராசிரியரின் நினைவு மலரில் வெளியிடப்படவுள்ளது.

பண்டிதமணியின் வாயில் இருந்து இறுதியாக வெளிவந்தது, பேராசிரியருக்கான அனுதாபச் செய்தியே.

மலரும் [illegible] பண்டிதமணியின் வாயில் [illegible] 'வெளவால்' என்ற திருமந்திரமே.

### யாழ். முத்திரைச் சந்தை சம்பவம்
# அமைப்பு குழு அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 14

வெகுஜன ஸ்தாபனங்கள் பல ஒன்றிணைந்து ஏற்படுத்திய அமைப்புக் குழு யாழ் முத்திரைச் சந்தை துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது

அந்த அறிக்கை முழு விவரம் வருமாறு;

12 3.83 அன்று யாழ் முத்திரைச் சந்தையில் ஊர்வலமாக வந்த மக்கள் மீது ரெலோவைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண்ணும் ஒரு பையனும் மரணமடைந்தனர் ஐந்திற்கு மேற்பட்டோர்காயமடைந்தனர்.

அதன் அடிப்படையில் மக்கள் ஊர்வலத்தை நிறுத்தி அருகிலுள்ள தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தனர்.

இந்த அராஜகத்துக்கெதிராக குரல் எழுப்பி இவை தொடர்வதை தடுக்க விரும்பிய வெகுஜன ஸ்தாபனங்கள் பல ஒன்றிணைந்து ஒரு அமைப்பு குழுவை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு நியாயம் வழங்க தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

ஊர்வலத்தில் வந்த மக்கள் விரும்பியதற்கிணங்க அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தங்கி இருப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த அமைப்பு குழுவானது இனி எந்தவித அராஜக செயலும் எந்த அமைப்பாலும் ஏற்படக் கூடாது என்ற மக்களின் விருப்பத்தின் பேரில் இயங்கி வருகிறது

எனவே வேறு பொது ஸ்தாபனங்களும் இக்காலத்திற்கிணங்க இணைந்து வேலை செய்ய முன்வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

தவிர கீழ்வரும் கோரிக்கைகளை அடையும் வரை தொடர்ந்து போராடுவதென மக்கள் தீர்மானித்து இருக்கிறார்கள் அவையாவன;

1 பொதுமக்கள் எதிரிக்கு எதிராக போராடிய போராளிகள் அறுவர் கொல்லப்பட்டிருக்கின்றனர் அதே சம்பவத்தில் அபாயமான நோயாளிகள் உள்ள பெரியாஸ்பத்திரியில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் இறந்தும் ஒருவர் காயமடைந்தும் உள்ளனர்.

மேலும் வேறு பல சந்தர்ப்பங்களில் போராளிகள் அநியாயமாக தமது உயிர்களை அக,புற இயக்க முரண்பாடுகளில் இழந்துள்ளார்கள். இனி மேலும் எந்த ஸ்தாபனத்தினாலும் இத்தகைய கொலைகள் நிகழாதென எல்லா ஸ்தாபனங்களும் உறுதிசெய்ய வேண்டும்.

2. பொதுமக்கள் பல்வேறு இடங்களிலும் வைத்து இம்சைப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஊர்வலத்தில் பங்கு பற்றிய மக்கள் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறார்கள் இப்படியான செயல்கள் இனியும் நடைபெறாது இருக்க எல்லா விடுதலை ஸ்தாபனங்களும் உத்தரவாதமளிக்க வேண்டும்.

3. பாஸ்கரன், வசந்தன் மற்றும் ஊர்வலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்

4. நிராயுதபாணிகளாக நியாயம் கேட்டு ஊர்வலத்தில் வந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது சம்பந்தமாக தமிழீழ விடுதலை இயக்கம் விடுத்த பொய்யான அறிக்கை வாபஸ் வாங்கப்பட்டு பொதுமக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

5. பொதுமக்கள் மீது ஆயுதம்திருப்பப்பட்டதாலும் ஏனைய பல போராளிகளுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாலும் ஏனைய இயக்கங்கள் இவ்விடத்தில் நியாயமான தீர்ப்பிற்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.

6. பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன படுகேவலமாக நசுக்கப்பட்டுள்ளன. இத்தகைய அடிப்படை மனித உரிமைகளை மக்கள் அநுபவிக்க சகல விடுதலை இயக்கங்களாலும் உத்தரவாதமளிக்கப்படவேண்டும்.

7. இனி எக்காலத்திலும் எந்தவொரு விடுதலை ஸ்தாபனத்தாலும் எந்தவொரு அராஜக செயலும் நடைபெறாது என்பதும் மீறி நடைபெறின் மக்கள் முன் பகிரங்கமாக தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டுமென்றும் சகல விடுதலை ஸ்தாபனங்களும் உத்தரவாதமளிக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டங்களை தொடர்ந்து நடாத்துவது என மக்கள் தீர்மானித்து இருக்கிறார்கள். இதற்கான பொறுப்பான சகலருக்கும் இரண்டு நாள் அவகாசம் அதாவது சனிக்கிழமை (15.3.86.)பகல் 12மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதற்கிடையில் இந்த கோரிக்கைகள் சம்பந்தமாக முழுமையான உத்தரவாதம் அளித்து பொதுமக்களிற்கு இயக்கங்கள் அறிக்கை மூலம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இக்கோரிக்கைகளின் அடிப்படையில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறும். நாளை காலை வரை இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜீவன்களின் பூதவுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைத்திருக்கப்படும்.

நாளை காலை 9 30மணிக்கு மக்களுடையஆதரவு திரட்டுவதன் மூலம் மேலும் இச் செயல்கள் நடைபெறாது தடுக்கும் நோக்குடன் அமைதியான ஊர்வலமும் இங்கிருந்து ஆரம்பமாகும். இன்று இச்சிறார்களுக்கு நடந்தது நாளை எமக்கும் நடக்கலாம். இவற்றிற்கெதிராக குரல் எழுப்பி எமது போராட்டத்தை சரியான வழியில் நெறிப்படுத்துவோம்.

இன்று பல பொதுமக்கள் அரச கூலிப்படை படைகளினால் பல்வேறு பிரதேசங்களிலும் பெருமளவில் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் போது இந்த அழிவின் மத்தியில் எமது சகல முரண்பாடுகளையும் சினேகபூர்வமாக தீர்த்து பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்படுமாறு சகல சக்திகளிற்கும் அறைகூவல் விடுப்போம்.

பிற்குறிப்பு:-

மக்கள் கூடி எடுத்த முடிபின்படி இறந்தவர்களின் உடல்களை கால அவகாசம் வழங்கப்பட்ட காலம்மட்டும் பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்காக வைத்திருப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## முத்தி - - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து தாய்மார், பெரியோர் இளைஞர்கள், யுவதிகள் என்ற பலதரப்பாரும் பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று வந்தனர்.

புதன்கிழமை நண்பகல் யாழ். நகரில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் நல்லூருக்கு அருகில் சென்று அடைந்தபோது நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் மரணமானது தெரிந்ததே.

எனினும் ஊர்வலம் சென்றவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தனர்.

புதன்கிழமை இரவைப் பல்கலைக்கழக வளவிலேயே கழித்தனர். நேற்று இரவும் அங்கேயே தங்கி இருந்தனர்.

நாளை சனிக்கிழமை நண்பகல் வரை இறந்தவர்களின் பூதவுடல்கள் பல்கலைக்கழக வளவு அரங்கிலேயே வைத்திருக்கப்படும் எனச் சொல்லப்பட்டது.

## காயமடைந்த . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஞுக்குள்ளால் குண்டு பாய்ந்தது ஆபத்தான நிலையில் உள்ளார். திருமணமானவர். பிள்ளைகள் இல்லை.

3. திருமதி. செல்வராசா- யோகமலர் (36 வயது) 4 பிள்ளைகளின் தாய், புருஷனை இழந்த விதவை கூலித் தொழில் புரிபவர் தொடையினுள் குண்டு துளைத்தது.

4. திருமதி. வேலாயுதம் - குண்டுமணி (53 வயது) இறந்த 3 வயதுக் குழந்தையைத் தனது தோளில் வைத்திருந்தவர் சிறு காயங்கள் மட்டும் உள்ளன.

## மயிலிட்டி . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தவர்களை நோக்கி ஹெலிக்கொப்டர் சுடத் தொடங்கியது.

அங்கு நின்றிருந்த மூன்றுவயதுக் குழந்தை ஒன்று உட்பட முதலில் இறந்த சுமதியின் சகோதரனான இரத்தினம் சதீஸ்வரன் (வயது 5) என்பவரும் கொல்லப்பட்டார்.

மூன்று வயது குழந்தை வேலாயுதம் என்பவரின் குழந்தை ஆகும். வேலாயுதம் வாய் பேசாதவர்.

சம்பவத்தில் நால்வர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தினால் ஒரு வீடு ஓடுகள் உடைந்த நிலையில் மோசமாக சேதம் அடைந்தது. வேறு மூன்று வீடுகள் ஓரளவு சேதம் அடைந்தன.

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி தமிழ்த் தவமுனிவர்
### உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை
அவர்களுக்கு
## எமது கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 27-6-1899 சிவபதம்: 13-3-1986

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழே என்று சங்கே முழங்கு" என்ற சங்கநாதம் ஓய்ந்துவிட்டது. சங்கத் தமிழைக் காட்டி எம்மொழியும் நம்மொழிக்கு இணையாமோ என்று கேட்ட செந்தமிழ்க் காவலர் மறைந்துவிட்டார். எம்மூரின் பேரொளியாய் பெருமை தேடித்தந்த மூதறிஞர் சைவக் காவலன் இலக்கிய கலாநிதிக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

கலாமன்ற சனசமூக நிலையம்,
திருநெல்வேலி.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரூமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 14-03-1986
Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under number QJ60 JN/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org